தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**04.11.2013**

**நெல்லை மாவட்டத்தில் மழை நீடிப்பு: அணைகளுக்கு நீர்வரத்து அதிகரிப்பு**

திருநெல்வேலி மாவட்டத்தில் தொடர்ந்து 3-ஆவது நாளாக ஞாயிற்றுக்கிழமையும் மழை நீடித்ததால் மக்களின் இயல்வு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

அதேவேளையில், நீர்ப்பிடிப்புப் பகுதியில் பலத்த மழை பெய்ததால் அணைகளுக்கு நீர்வரத்து கணிசமாக அதிகரித்துள்ளது.

தமிழகத்தில் வடகிழக்குப் பருவமழை தொடங்கி பெய்து வருகிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் பரவலாக 3-ஆவது நாளாக ஞாயிற்றுக்கிழமையும் மழை பெய்தது.

ஞாயிற்றுக்கிழமை காலை நிலவரப்படி பதிவான மழை (மில்லி மீட்டரில்): பாபநாசம் அணை 73, சேரன்மகாதேவி 76, பாபநாசம் கீழ் அணை 38, மணிமுத்தாறு அணை 62.4, கடனாநதி அணை 6, ராமநதி அணை 4, அம்பாசமுத்திரம் 39.2, கருப்பாநதி 2, குண்டாறு 6, அடவிநயினார் 7, நம்பியாறு 10, கொடுமுடியாறு 50, திருநெல்வேலி 4, பாளையங்கோட்டை 18.6.

நீர்வரத்து அதிகரிப்பு: மேற்குத் தொடர்ச்சி மலையில் நீர்ப்பிடிப்புப் பகுதியில் பெய்துவரும் மழையால் அணைகளுக்கு நீர்வரத்து கணிசமாக அதிகரித்துள்ளது. பாபநாசம் அணைக்கு நொடிக்கு 1483.49 கனஅடியும், மணிமுத்தாறு அணைக்கு நொடிக்கு 1227 கனஅடியும் நீர்வரத்து இருந்தது.

பாபநாசம் அணையிலிருந்து தாமிரவருணி ஆற்றில் 903.50 கனஅடி தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. மணிமுத்தாறு அணை மூடப்பட்டது.

கடனாநதி அணைக்கு நொடிக்கு 45 கனஅடியும், ராமநதி அணைக்கு நொடிக்கு 20 கனஅடியும் நீர்வரத்து இருந்தது.

கடனாநதி அணையிலிருந்து பாசனத்துக்கு 45 கனஅடியும், ராமநதி அணையிலிருந்து 30 கனஅடியும் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

அணைகளின் நீர்மட்டம் நிலவரம்: ஞாயிற்றுக்கிழமை நிலவரப்படி பாபநாசம் அணை நீர்மட்டம் 75 அடியாகவும், சேர்வலாறு அணை 80.71 அடி, மணிமுத்தாறு அணை 52.90 அடி, கடனாநதி அணை 42.40 அடி, ராமநதி அணை 50.50 அடி, கருப்பாநதி அணை 41.64 அடி, குண்டாறு அணை 36.10 அடி, அடவிநயினார் அணை 92 அடி, வடக்குப் பச்சையாறு 3 அடி, நம்பியாறு அணை 7.35 அடி, கொடுமுடியாறு அணை 4 அடி, பேச்சிப்பாறை அணை 19.70 அடி, பெருஞ்சாணி அணை 58.35 அடியாகவும் இருந்தது.

**நெல் மகசூல் அதிகரிக்க ஒருங்கிணைந்த உர மேலாண்மை: வேளாண் இணை இயக்குநர் தகவல்**

நெல் பயிரில் உயர் விளைச்சல் பெறுவதற்கு ஒருங்கிணைந்த உர மேலாண்மை நிர்வாகத்தை விவசாயிகள் கடைபிடிக்க வேண்டும் என்று வேலூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் ஆர்.ஜெயசுந்தர் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:

பெருகி வரும் மக்கள்தொகையையும் இப்போதைய உற்பத்திக் குறியீட்டு அளவையும் நோக்கினால் எதிர்வரும் ஆண்டுகளில் நெல்லில் ஹெக்டேருக்கு சராசரியாக 7 டன் விளைச்சல் என்ற இலக்கை நாம் அடைய வேண்டியுள்ளது. இதில் குறிப்பிடத்தக்க சாதனையை எட்டுவதற்கு உர மேலாண்மை நிர்வாகம் கைக்கொடுக்கும்.

நெல் விளைச்சலில் 40 விழுக்காடு உர நிர்வாகத்தைப் பொருத்தே அமைகிறது. இயற்கை எருக்களான பசுந்தாள் உரம், தொழு உரம், மண்புழு உரம், மக்கிய தென்னை நார்க் கழிவு, செயற்கை உரங்களான யூரியா, சூப்பர் பாஸ்பேட், பொட்டாஷ் உரங்கள், உயிரி உரங்களான பாஸ்போ பாக்டீரியா, அசோஸ்ஸ் பைரில்லம், நுண்ணூட்ட சத்துகளைச் சேர்த்து சமச்சீர் உணவாக நெல்லுக்கு

அளிப்பது தான் ஒருங்கிணைந்த உர மேலாண்மை நிர்வாகம். இதனால் நிலவளத்தை காத்து, விளைச்சலை அதிகரிக்கச் செய்ய முடியும்.

நெல் பயிருக்கு அடியுரம்

மண் ஆய்வு அடிப்படையில் வயலில் வேதியியல் உரங்களை இட வேண்டும். இதனால், மண்ணிலிருந்து பயிருக்கு கிடைக்கும் உரச் சத்தின் அளவையும் பயிரின் உரத் தேவையையும் தீர்மானிக்கலாம். இதனால் தேவைக்குக் குறைவான அல்லது அதிகமாக உரமிடுவதைத் தவிர்க்கலாம்.

மண் ஆய்வு செய்யாத நிலமாக இருப்பின், ஏக்கருக்கு 50 கிலோ தழைச் சத்தும், 20 கிலோ மணிச் சத்தும், 20 கிலோ சாம்பல் சத்தும் இட வேண்டும். இதில் அடியுரமாக மணிச்சத்தை ஊட்டமேற்றிய தொழு உரமாக இட வேண்டும். நெல் பயிரின் இளம் பருவத்தில் வேர்ப் பிடித்து நன்றாக வளா்வதற்கும், பூக்கள் பூப்பதற்கும் நெல்மணிகளின் வளர்ச்சி எண்ணிக்கை, முதிர்வடைதல் ஆகியவற்றை சீராக்கி விளைச்சலைப் பெருக்குவதற்கு ஏக்கருக்கு 62.5 கிலோ சூப்பர் பாஸ்பேட் உரத்தை 300 கிலோ தொழு உரத்துடன் கலந்து ஒரு மாதம் காற்று புகாமல் வைத்து ஊட்டமேற்றிய தொழுவுரமாக மாற்றி கடைசி உழவின்போது இட வேண்டும்.இரும்புச் சத்து குறைபாடுள்ள நிலத்தில் அடியுரமாக பெரஸ் சல்பேட்டை ஹெக்டேருக்கு 50 கிலோ என்ற அளவில் இடவேண்டும். மானாவாரி நெல்லுக்கு சிங்க் சல்பேட் ஹெக்டேருக்கு 25 கிலோ என்ற அளவில் விதைப்பின்போது இட வேண்டும்.

ஒரு ஹெக்டேருக்கு 10 பாக்கெட் அசோஸ்பைரில்லம், 10 பாக்கட் பாஸ்போ பாக்டிரியா ஆகியவற்றுடன் 25 கிலோ தொழு உரம், 25 கிலோ மண் கலந்து வயலில் முதல் மழை வந்தவுடன் தெளிக்க வேண்டும்.

மேலுரம்

நெல் பயிருக்கு மேலுரமிடுவதில் மிகுந்த கவனம் தேவை. நெல் வளர்ச்சியில் தூர்கட்டும் பருவம், தண்டு உருளும் பருவம், பூக்கும் தருணம் ஆகிய காலங்களில் பயிர்களுக்கு உணவு சத்துக்களின் தேவை அதிகம். இதற்கு தழைச்சத்து முக்கிய பங்கு வகிக்கிறது.

மானாவாரியில் பகுதி பாசனம் செய்யும் நெல் ரகங்களுக்கு, தழைச்சத்து அடங்கிய யூரியாவை, நட்ட 20, 40, 60-ம் நாளில் முறையே ஏக்கருக்கு 22 கிலோ யூரியா என்ற அளவில் இட வேண்டும். சாம்பல் சத்து உரத்தை, நட்ட 20, 40-ம் நாளில் முறையே ஏக்கருக்கு 8, 9 கிலோ இட வேண்டும்.

விதைத்த முதலிலும், இடையேயும் நல்ல மழை பெய்து, பயிரின் வளர்ச்சி நன்கு அமைந்திருப்பின் இரண்டாம் தருணமான 40 முதல் 45 நாள்களுக்குள் இடப்படும் யூரியாவை ஏக்கருக்கு 35 கிலோவாக அதிகரிக்கலாம். அதன் பின்பு குறைந்தது 10 நாளாவது தண்ணீர் தேங்கியிருத்தல் கட்டாயத் தேவை.

இலைவழி உரமிடல்

இலைவழி உரமாக யூரியா 1 சதம், டிஏபி2 சதம் கரைசலை இருமுறை குருத்து உருவான தருணத்திலும், பத்து நாள்கள் கழித்து மீண்டும் ஒரு முறையும் தெளிப்பது நல்லது. இந்த வழிமுறைகளை முறையாக பயன்படுத்துவதால் நெல் மகசூலை பெருக்க முடியும் என்றார் ஜெயசுந்தர்.

**நாளை விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

திருவண்ணாமலை மாவட்டத்தில் நவம்பர் மாதத்துக்கான வட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர் கூட்டம், செவ்வாய்க்கிழமை (நவம்பர் 5) நடைபெறுகிறது.

மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்களிலும் வழக்கமாக மாதத்தின் முதல் வெள்ளிக்கிழமைகளில் விவசாயிகள் குறைதீர் கூட்டங்கள் நடைபெற்று வந்தன. இது நவம்பர் மாதத்தில் இருந்து முதல் செவ்வாய்க்கிழமைகளுக்கு மாற்றப்பட்டுள்ளது.

அதன்படி, நவம்பர் 5ஆம் தேதி காலை 10 மணிக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்களிலும் வட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர் கூட்டங்கள் நடத்தப்படும். இக் கூட்டங்களில் அந்தந்த பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெறலாம் என்று மாவட்ட ஆட்சியர் அ.ஞானசேகரன் தெரிவித்துள்ளார்.

**நவீன முறையில் கரும்பு சாகுபடி: ஹெக்டேருக்கு ரூ.30,000 மானியம்**

நீடித்த நவீன கரும்பு சாகுபடி முறையில் கரும்பு சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ஹெக்டேருக்கு ரூ.30,000 மானியம் வழங்கப்படும் என ஈரோடு மாவட்ட வேளாண் இணை இயக்குநர் கிருஷ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெள்ளிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

÷ஈரோடு மாவட்டத்தில் எஸ்.எஸ்.ஐ. எனப்படும் நீடித்த நவீன கரும்பு சாகுபடி முறையை, விவசாயிகள் அதிகளவில் கடைப்பிடிக்கின்றனர். இம் முறையில், சாகுபடி செய்யும் விவசாயிக்கு ஹெக்டருக்கு ரூ.30 ஆயிரம் மானியத்தொகை வழங்கப்படுகிறது.

2013-14ம் ஆண்டில் ஈரோடு மாவட்டத்தில் மட்டும், மொத்தம், 490 ஹெக்டேர் பரப்பளவில் எஸ்.எஸ்.ஐ. முறையில் சாகுபடி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இம்முறை சாகுபடி மூலம் ஹெக்டேருக்கு 70 முதல் 80 டன் மகசூல் பெற முடியும்.

அதிகளவில் விதைக்கரணைகள் உருவாக்கப்பட்டு, ஒரு கிளையில், 10 முதல், 15-க்கும் மேற்பட்ட கரும்புகள் வளரும். இதனால் விளைச்சல் அதிகரித்து விவசாயிகள் அதிக பயனடைகின்றனர்.

கடந்த, 2011-12-ம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட எஸ்.எஸ்.ஐ., திட்டத்தில் அதிக மகசூல் கிடைப்பதால், விவசாயிகளிடம் விழிப்புணர்ச்சி ஏற்பட்டு, பயனடைந்து வருகின்றனர்.

இம்முறை மூலம், 20 முதல் 30 சதவீதம் வரை அதிக மகசூல் பெறலாம். மானிய உதவித்தொகை பெறும் தகுதியுடைய விவசாயிகள், மொடக்குறிச்சி, அம்மாபேட்டை, பவானி, அந்தியூர் உள்ளிட்ட, 14 ஒன்றியங்களிலும் அந்தந்த பகுதிகளில் உள்ள கரும்பாலை நிறுவனங்களின் மூலம் தேர்வு செய்யப்பட்டு வருகின்றனர்.

÷சொட்டு நீர்ப்பாசனம் மற்றும் ஆரம்ப கட்ட பணிகளுக்காக இந்த மானியம் வழங்கப்படுகிறது. சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியமும், இதர விவசாயிகளுக்கு 75 சதவீத மானிய உதவித்தொகையும் வழங்கப்படுகிறது எனத் தெரிவித்துள்ளார்.

**குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை: கடலோர மாவட்டங்களில் கன மழை எச்சரிக்கை**

குமரிக் கடலில் உருவாகி உள்ள காற்றழுத்த தாழ்வு நிலையால் தமிழகம் மற்றும் புதுச்சேரியின் கடலோர மாவட்டங்களில் அடுத்த 24 மணி நேரத்துக்கு ஆங்காங்கே கனமழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

இலங்கை அருகே உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை ஞாயிற்றுக்கிழமை மாலை கன்னியாகுமரி அருகே கடலில் நிலை கொண்டுள்ளது. அது மேலும் மேற்கு நோக்கி நகரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதனால் தமிழகம் மற்றும் புதுச்சேரியில் திங்கள்கிழமை அநேக இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய கனமழையோ பெய்யும். தமிழகம், புதுச்சேரி, கடலோர ஆந்திரா, ராயலசீமை, கர்நாடகம், தெற்கு உள் கர்நாடகம், லட்சத்தீவு உள்ளிட்ட கடலோரப் பகுதிகளில் ஆங்காங்கே கனமழை பெய்யும்.

சென்னையைப் பொருத்தமட்டில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். ஒரு சில இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும் என்று வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் கடலோரப் பகுதிகளில் அநேக இடங்களிலும், உள் மாவட்டங்களின் ஒரு சில இடங்களிலும் கன மழை பெய்துள்ளது. மிக அதிகபட்சமாக ராமநாதபுரத்தில் 100 மி.மீட்டர் மழை பதிவாகி உள்ளது. தமிழகத்தில் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி வரை முடிந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை விவரம்(மி.மீட்டரில்):

ராமநாதபுரம் (100), மைலாடி (கன்னியாகுமரி) 90, சாத்தான்குளம், சேரன்மகாதேவி 80, திருச்செந்தூர், பாபநாசம் 70, மணிமுத்தாறு, சாத்தனூர் அணை 60 நாகர்கோவில், பாம்பன், நாங்குநேரி 50 மி.மீட்டர் மழை பதிவாகி உள்ளதாக வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் போதிய மழை இல்லை:

வடகிழக்கு பருவமழை தொடங்கி 10 நாள்கள் கடந்துவிட்ட நிலையில் தமிழகத்தில் இதுவரை போதிய மழை பெய்யவில்லை. கடந்த வாரம் வங்கக்கடலின் தென் பகுதியில் உருவான காற்றழுத்த தாழ்வு நிலை ஆந்திரத்துக்குச் சென்றதால் அங்கு கன மழை பெய்து, பல இடங்கள் வெள்ளத்தில் மூழ்கின.

ஆனால், தமிழகத்தில் ஓரிரு இடங்களில்தான் கனமழை பெய்தது. இந்த நிலையில், குமரி கடல் அருகே உருவாகி உள்ள காற்றழுத்த தாழ்வு நிலையாவது தமிழகத்துக்கு அதிக மழை கொடுக்குமா என்று எதிர்பார்ப்பு விவசாயிகளிடையே உள்ளது.

**மேட்டூர் அணை நீர்மட்டம்: 79.92 அடியாக சரிவு**

மேட்டூர் அணையின் நீர்மட்டம் ஞாயிற்றுக்கிழமை மாலை 79.92 அடியாக இருந்தது.

அணைக்கு நொடிக்கு 3,918 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது.

அணையிலிருந்து நொடிக்கு 14,997 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

கல்லணையிலிருந்து நொடிக்கு காவிரி, வெண்ணாற்றில் தலா 4,800 கன அடி வீதமும், கல்லணைக் கால்வாயில் 2,513 கன அடி வீதமும், கொள்ளிடத்தில் 521 கன அடி வீதமும் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**04.11.2013**

## சிறுதானிய உற்பத்தியில் வேளாண்துறை கவனம்

திண்டுக்கல்:சிறுதானிய உற்பத்தியை அதிகரிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுமாறு வேளாண் துறைக்கு அரசு உத்தரவிட்டுள்ளது. உடலில் ஏற்படும் பெரும்பாலான பாதிப்புகளுக்கு காரணம் பாரம்பரிய உணவுகளை உட்கொள்ளாமல் இருப்பதுதான் என்பது பல்வேறு ஆய்வுகளின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளன. உடலில் உள்ள கொழுப்பு, சர்க்கரை போன்றவற்றை கட்டுப்படுத்தும் சக்தி சிறுதானியங்களில் அதிகமாக உள்ளது. தேவை குறைவு காரணமாக விவசாயிகள், இவற்றை போதுமான அளவிற்கு விளைவிப்பதில்லை. இதனால் வரகு, திணை, குதிரை வாலி, சாமை, சோளம், கம்பு, ராகியின் விலை அதிகமாக உள்ளது. சிறுதானிய உற்பத்தியை பெருக்குவதற்காக விவசாயிகளுக்கு தேவையான விதைகளை வழங்குவதோடு, அவர்களை ஊக்குவிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுமாறு வேளாண் துறைக்கு அரசு உத்தரவிட்டுள்ளது. இதையடுத்து விவசாயிகளுக்கான சாகுபடி பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. விவசாயிகளிடமிருந்து சிறுதானியங்களை கொள்முதல் செய்து, தேவையான உணவு பொருளாக்கி விற்பனை செய்ய வேளாண்துறை முடிவு செய்துள்ளது

## போதிய மழை இல்லாததால் மானாவாரி விவசாயிகள் கவலை கால்நடைகளுக்கும் தீவன தட்டுப்பாடு

ஆண்டிபட்டி:ஆண்டிபட்டி பகுதியில் இந்த ஆண்டும் மழை பொய்த்து வருவதால், மானாவாரி விவசாயத்திற்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. விவசாயத்துடன் கால்நடை வளர்ப்பையும் உப தொழிலாக கொண்ட விவசாயிகள் இந்த ஆண்டும் தீவன தட்டுப்பாட்டை எப்படி சமாளிப்பது என்று கவலை அடைந்துள்ளனர்.

ஆண்டிபட்டி பகுதியில் நூறுக்கும் மேற்பட்ட கிராமங்களில் மானாவாரி விவசாயம் மட்டுமே உள்ளது. ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் தென்மேற்கு பருவ மழையை நம்பி விதைப்பு பணிகளை மேற்கொள்வர். அடுத்தடுத்து பெய்யும் மழை, வடகிழக்கு பருவ மழையால் சிறுதானியங்கள், எண்ணெய் வித்துக்கள், பருத்தி, பயறு வகைகள் டிசம்பர், ஜனவரி மாதங்களில் பலன் தரும்படியான விளைச்சல் ஏற்படும். கடந்த சில ஆண்டுகளாக ஆண்டிபட்டி பகுதியில் தென்மேற்கு பருவ மழை குறிப்பிட்ட காலத்தில் பெய்யவில்லை. இதனால் மானாவாரி விவசாயிகள் பலரும், விதைப்பு பணிகளை மேற்கொள்ள முடியாமல் தங்கள் நிலங்களை தரிசாக்கி விட்டனர். வடகிழக்கு பருவ மழையை நம்பி விதைப்பு பணிகள் மேற்கொண்டால் பயிர்கள் வளர்ந்து, பலன் தரும் நிலையில் பனி, வெயிலின் தாக்கத்தால் பாதிப்பு ஏற்பட்டு, வளர்ந்த பயிர்களால் பலன் இல்லாமல் போய்விடும். இந்த ஆண்டும் ஆண்டிபட்டி பகுதியில் தென்மேற்கு பருவ மழை மானாவாரி விவசாயிகளுக்கு கை கொடுக்கவில்லை. வடகிழக்கு பருவ மழை துவங்கி, இரண்டு நாட்கள் பெய்த நிலையில் அடுத்த மழை பெய்யவில்லை. இரு வாரங்களுக்கு முன்பு பெய்த மழையை நம்பி விவசாயிகள் பலரும் விதைப்பு பணிகள் மேற்கொண்டனர். சிறுதானியம், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள் முளைத்து வளர்ந்து வரும் நிலையில் அடுத்து மழை பெய்யவில்லை. இதனால் முளைத்த பயிர்கள் காய்ந்து வருகின்றன. மானாவாரி நிலங்களில் விதைக்கப்பட்ட பயிர்கள் பலன் தராவிட்டால் தீவனத்திற்காவது பயன்படட்டும் என்று இருந்த விவசாயிகள் விதைப்புக்குப்பின் மழை பெய்யாததால் கவலை அடைந்துள்ளனர்.

## பெரியாறு அணை நீர் மட்டம் உயர்வு

கூடலூர்:பெரியாறு அணை நீர்பிடிப்பு பகுதியில், பெய்த சாரல் மழையால், அணைக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது. கடந்த சில தினங்களாக, பெரியாறு அணை நீர்பிடிப்பு பகுதியில், மழையின்றி, நீர்வரத்து குறைந்து வந்தது. இந்நிலையில், நேற்று பெய்த சாரல் மழையால், அணைக்கு நீர்வரத்து சற்று அதிகரித்து, 1223 கன அடியாக இருந்தது. தமிழகப்பகுதிக்கு 805 அன அடி நீர் திறந்து விடப்பட்டுள்ளது. நீர் இருப்பு 2213 மில்லியன் கன அடியாகும். நீர் மட்டம்

117.70 (136) அடியாக உள்ளது . நீர்பிடிப்பு பகுதியில் தொடர்ந்து சாரல் மழை பெய்து வருவதால், நீர்மட்டம் உயரும் வாய்ப்புள்ளது. வைகை அணையின் நீர்மட்டம் 47.75 (71) அடியாக இருந்தது. நீர்வரத்து 516 கன அடியாகவும், நீர்திறப்பு 60 கன அடியாகவும் இருந்தது. நீர் இருப்பு 1182 மில்லியன் கன அடியாகும்.

## மழையால் திருவாடானையில் விவசாய பணிகள் கூலி உயர்வால் களை எடுப்பு பணிக்கு "கிராக்கி

திருவாடானை : சில நாட்களாக பெய்து வரும் தொடர் மழையால், திருவாடானை தாலுகா பகுதியில் விவசாய பணிகள் தீவிரம் அடைந்துள்ளது. கூலி உயர்வால் களை எடுப்பு பணிக்கு கூலி ஆட்களுக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளது.

ராமநாதபுரம் மாவட்டத்தின் நெற்களஞ்சியமான திருவாடானை தாலுகாவில் 42 ஆயிரத்து 500 எக்டேர் பரப்பளவில் நெல் விவசாயம் செய்யப்படுகிறது. இதில், நடப்பாண்டு 60 சதவீதத்திற்கும் மேற்பட்ட நிலங்களில் விவசாய பணிகள் துவங்கியுள்ளது. கடந்த, செப்டம்பரில் விதைக்கப்பட்ட நெல் மழை பெய்யாததால், விதைகள் முளைப்பு தன்மையை இழந்தது.

இதனால், அக்டோபர் மாதம் மீண்டும் நெல் விதைப்பு நடந்தது. சில நாட்ககளாக பெய்து வரும் மழையால் விதைகள் முளைக்க துவங்கியுள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். தற்போது, களை எடுக்கும் பருவத்தை பயிர்கள் எட்டியுள்ளது. ஒரு சில இடங்களில் களை எடுப்பு பணிகள் நடந்து வருகிறது. சூச்சனி கிராமத்தை சேர்ந்த விவசாயிகள், பாலுச்சாமி, ரத்தினம்

கூறியதாவது: கடந்தாண்டை காட்டிலும், நடப்பாண்டு பருவமழை நம்பி நெல்விதைப்பில் ஈடுபட்டுள்ளோம்.சமீப நாட்களாக அவ்வப்போது பெய்து வரும் மழையால் திருவாடானை தாலுகா பகுதியில் பெரும்பாலான நெற்பயிர்கள் முளைப்பு திறனை எட்டியுள்ளது. இதனால், தற்போது நிலங்களில் களைகள் அதிகரித்துள்ளது. ஆகவே, களை கொல்லி மருந்து அடித்து வருகிறோம். இதற்கு ஒரு ஏக்கருக்கு ரூ. ஆயிரம் செலவாகிறது. மேலும், கூலி ஆட்கள் மூலமும் களை

அகற்றும் பணியும் நடக்கிறது. கடந்தாண்டு களை எடுக்க ஒரு நாளைக்கு (காலை 7 முதல் மதியம் 2 மணிவரை) ஒரு நபருக்கு ரூ. 150 கூலி வழங்கப்பட்டது. தற்போது, 200 ரூபாய் வரை கூலி உயர்ந்துள்ளது. இதனால், கூலியாட்கள் கூலி உயர்வும் அதிகரித்துள்ளது. தண்ணீர் தேங்கிநிற்கும் அளவிற்கு இன்னும் மழை பெய்யவில்லை. ஆகவே, களை எடுப்பு பணிகள் முடிந்த பின்பு உரம் போடும் பணிகள் நடைபெறும். பொதுவாக ஆண்டு தோறும் கூலி உயர்வு, உரம், பூச்சி மருந்து விலை உயர்வால் வறுமைகோட்டிற்கு கீழ் உள்ள விவசாயிகள் பெரிதும் பாதிக்கபட்டுள்ளனர். விவசாய பொருட்களை விலை குறைப்பு செய்தால் விவசாயிகள் மிகவும் பயன் அடைவார்கள். ஒவ்வொரு ஆண்டும் பொருட்களின் விலை கூடி வருவதால் மிகவும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. ஆகவே, அடுத்தாண்டு உரம், பூச்சிமருந்து, களை கொல்லி மற்றும் விவசாயத்திற்கு தேவையான பொருட்களின் விலையை கட்டுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும், என்றனர்.

## பயறு சாகுபடி பயிற்சி

ஸ்ரீவில்லிபுத்தூர்:தமிழ்நாடு வேளாண் பல்கலை.,பருத்தி ஆராய்ச்சி நிலையம் சார்பில், பயறு வகைகளில் உற்பத்தி திறனை அதிகரிக்கும் திட்டம் பற்றி, தேவதானத்தில் விவசாயிகளுக்கு பயிற்சி வழங்கப்பட்டது.

ஆராய்ச்சி நிலைய முதல்வர் அமலா பாலு தலைமை வகித்து, பயறு வகை சாகுபடியின் முக்கியத்துவம் பற்றி பேசினார். பயறு வகைகளில் விதை உற்பத்தி தொழில் நுட்பங்கள் பற்றி உதவி பேராசிரியர் ஞானசேகரன் பேசினார்.

பாசி பயிறு சாகுபடியில் வரிசை விதைப்பு, பயிர் எண்ணிக்கை பராமரிப்பு, நீர், உரம், களை மேலாண்மை, உழவியல் தொழில் நுட்பங்களை திட்ட விஞ்ஞானி வீரபுத்திரன் விளக்கினார். பூச்சியியல் பேராசிரியர் சாந்தி பயறு வகைகளில் தோன்றும் பூச்சிகளை கட்டுப்படுத்துவது குறித்து விளக்கமளித்தார். விவசாயிகள் கண்ணன், முத்து மாணிக்கம் தங்களது அனுபவத்தை பேசினர். ஊட்டச்சத்து குறைபாடு மேலாண்மை குறித்து, உதவி பேராசிரியர் கோமதி விளக்கமளித்தார். ஏற்பாடுகளை இளநிலை ஆராய்ச்சியாளர் வெங்கடேஸ்வரன் செய்திருந்தார்.

## கோபி பகுதியில் நெல் அறுவடை பணி தீவிரம் ஏக்கருக்கு ரூ.2,500 கூலி உயர்வால் அதிர்ச்சி

கோபிசெட்டிபாளையம்: தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்தில் நெல் அறுவடை பணி துவங்கி உள்ளது. அறுவடை கூலி ஏக்கருக்கு, 2,500 ரூபாய் வரை அதிகரித்துள்ளதால், விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.
பவானிசாகர் அணையில் திறக்கப்படும் தண்ணீர் கொடிவேரி அணையில் தடுக்கப்பட்டு, தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்தில் விடப்படுகிறது. தடப்பள்ளியில், 17,658 ஏக்கர், அரக்கன்கோட்டை வாய்க்கால் மூலம், 6,850 ஏக்கர் என, 24,508 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகின்றன. பவானிசாகர் அணை நம்பியே தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசன வசதி உள்ளது.
நடப்பாண்டு பவானிசாகர் அணை நீர்மட்டம், 85 அடியாக இருந்ததால், அரக்கன்கோட்டை, தடப்பள்ளி பாசனத்தில் தண்ணீர் திறக்கப்பட்டது.
பாசனப்பகுதியில் குறுகிய கால பயிர்களான ஏ.எஸ்.டி., 16, ஆடுதுறை, 36, 37, 42, 43, 45, 47, கோ 47 மற்றும் வீரிய ஒட்டு நெல் கோ.ஆர்.ஹெச்-3 ஆகிய ரகங்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன.
பாசனப்பகுதியில் நெற்கதிர்கள் முற்றிவிட்டதால், அறுவடை பணி துவங்கி உள்ளன. நெல் அறுவடை காலங்களில், வடமாநிலங்களை சேர்ந்த தனியார் வியாபாரிகள், விவசாயிகளிடம் நேரிடையாக நெல் கொள்முதல் செய்கின்றனர். அரசு கொள்முதல் நிலையங்களுக்கு நெல் கொண்டு செல்லவதில் உள்ள சிரமம் மற்றும் போக்குவரத்து செலவு ஆகிய காரணங்களால், விவசாயிகளும், வியாபாரிகளிடம் நெல்லை விற்பனை செய்து விடுகின்றனர்.
தமிழக அரசின் நெல் கொள்முதல் ஆதரவு விலையாக, மோட்ட ரகம், கிலோ, 13.60 ரூபாய், சன்ன ரகம் கிலோ, 13.95 ரூபாய் என உயர்த்தி உள்ளது. விலை உயர்வு நவம்பர், 1ம் தேதி முதல் அமலுக்கு வந்தது. சில இடங்களில் மட்டுமே, நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்பட்டுள்ளன.
வடகிழக்கு பருவமழை துவங்கியதால், நெல் வயல்களில் தண்ணீர் தேங்கி

நிற்கிறது. பருவமழை தீவிரமடையும் முன், நெல் அறுவடையை விவசாயிகள் துவங்கி உள்ளனர். நெற்கதிர்கள் கீழே சாய்ந்து கிடப்பதால், இயந்திரம் மூலம் அறுவடை செய்ய முடியாமல், தொழிலாளர்கள் மூலமே நெல் அறுவடை செய்ய வேண்டி உள்ளது. நடப்பாண்டு நெல் அறுவடை பணிக்கு, ஏக்கருக்கு, 7,500 ரூபாய் செலவு ஆவதால், விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தடப்பள்ளி பாசன விவசாயிகள் கூறியதாவது:

நடப்பாண்டு துவக்கத்தில், பவானிசாகர் அணையின் நீர்மட்டம் வீழ்ச்சியாக இருந்தால், ஏப்ரல், 16ம் தேதி தண்ணீர் திறக்கவில்லை.

காலம்தவறி நெல் பயிரிட்டதால், அறுவடை நேரத்தில் வடக்கிழக்கு பருவமழை துவங்கியுள்ளது. வயல்களில் தண்ணீர் தேங்கி நின்று, கதிர்கள் கருகுகிறது. மழையால் முன்கூட்டியே அறுவடையை துவங்கி உள்ளோம்.

கடந்த காலங்களில் ஏக்கருக்கு, 5,000 ரூபாய் கூலி கொடுத்தோம். தற்போது, 7,500 ரூபாய் கேட்கின்றனர். எனவே, அரசு அறிவித்துள்ள நெல்லுக்கான ஈரப்பத அளவை கூடுலாக்க வேண்டும். நெல் அறுவடை பணி துவங்கி உள்ளதால் நெல் கொள்முதல் நிலையங்களை கூடுதலாக திறக்க வேண்டும், என்றார்.

## கால்நடைகளின் தீவன பிரச்னைக்கு தீர்வு தொடர்மழையால் பசுமையான தாளவாடி

சத்தியமங்கலம்: தாளவாடி பகுதியில் தொடர்மழை பெய்வதால், பசுமையாக மாறியது. இதனால், இப்பகுதியில் மாடுகளின் மேய்ச்சல் பிரச்னை தீர்ந்துள்ளது. சத்தியமங்கலம் அடுத்துள்ளது தாளவாடி மலைப்பகுதி. கடந்த இரண்டு ஆண்டுகளாக, போதிய மழையின்றி, இப்பகுதி கடும் வறட்சியாக இருந்தது. இதனால் தாளவாடி பகுதியில் விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பு உள்ளிட்ட அனைத்து தொழில்களும் பாதிக்கப்பட்டது.

இந்நிலையில் தாளவாடி மற்றும் சுற்றுப்பகுதியில் கடந்த இரண்டு மாதங்களாக அவ்வப்போது பலத்த மழை பெய்து வருகிறது.

இதனால் விவசாயிகள் வேளாண்மை பணியில் தீவிரம் காட்டி வருகின்றனர். தொடர்மழையால், வனப்பகுதி மற்றும் கால்நடைகளின் மேய்ச்சல் பகுதியில்

புற்கள், செடிகள், மரங்களும் செழித்து வளர்ந்து, எங்கு பார்த்தாலும் பசுமையாக காட்சியளிக்கிறது. இதனால் இப்பகுதியை சேர்ந்த மாடுகளின் தீவன பிரச்னைக்கு தீர்வு ஏற்பட்டுள்ளது.

இங்குள்ள பெரும்பாலான மாடுகள், மேய்ச்சல் நிலங்களில் தீவனங்கள் உண்டே பழகியதாலும், அதிக அளவில் தீவனம் உண்பதாலும், இவற்றை பட்டியில் தினமும் கட்டி வைத்து தீவனம் வழங்குவது எளிதானதல்ல. அதனால், மேய்ச்சல் முறைக்கு அழைத்து சென்று வந்தால் மட்டுமே, அவை முழுமையாக உணவு எடுத்து திருப்தி அடையும்.

வறட்சியான நேரத்தில், மாடுகளை விற்பனை செய்து வந்த நிலை மாறி, மீண்டும் மாடுகளை வாங்கும் எண்ணத்துக்கு விவசாயிகள் வந்துள்ளனர்.

## சத்தியில் வாழைத்தார் ரூ.6 லட்சத்துக்கு ஏலம்

சத்தியமங்கலம்: சத்தியமங்கலம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் நடந்த, வாழை தார் ஏலத்தில் மொத்தம், 6.40 லட்சம் ரூபாய்க்கு விற்பனை நடந்தது.

சத்தியமங்கலம், கோபி ரோட்டில் உள்ளது தொடக்க வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம். இங்கு விவசாயிகள் உற்பத்தி செய்யும் வாழை, பருத்தி, மஞ்சள் உள்ளிட்ட பொருட்கள் ஏலம் முறையில் விற்பனை செய்யப்படுகிறது.

நேற்று முன்தினம் வாழை தார் ஏலம் நடந்தது. ஏலத்தில் சத்தியமங்கலம் மற்றும் பவானிசாகர் சுற்றுப்பகுதியில் இருந்து ஏராளமான விவசாயிகள், தங்கள் வயலில் விளைந்த வாழைத்தார்களை விற்பனைக்காக கொண்டு வந்தனர்.

கூட்டுறவு சங்க தலைவர் வரதராஜ் தலைமையில் நடந்த ஏலத்தில், தீபாவளியை முன்னிட்டு, கடந்த வாரத்தைவிட வாழைத்தார்கள் அதிக விலைக்கு ஏலம் போனது. நேற்று முன்தினம் இரவு வரை நடந்த ஏலத்தில், கதலி ஒரு கிலோ, 43 ரூபாய் வரையிலும், நேந்திரம் கிலோ ஒன்று, 48 ரூபாய் வரைக்கும் ஏலம் போனது. மொத்தம், 6.40 லட்சம் ரூபாய்க்கு வாழைத்தார் ஏலம் போனது, குறிப்பிடத்தக்கது.

## கால்நடைகளுக்கு சிறப்பு மருத்துவ முகாம்

பந்தலூர் : பிதர்காடு வனச்சரகம் சார்பில் கால்நடைகளுக்கு சிறப்பு மருத்துவ முகாம் நடத்தப்பட்டது.
கூடலூர் வனக்கோட்டம், பிதர்காடு வனத்துறை இணைந்து வனச்சரகத்திற்கு உட்பட்ட ராக்வுட், தேவர்சோலை, 9வது மைல், நெலாக்கோட்டை உள்ளிட்ட பகுதிகளில் சிறப்பு கால்நடை மருத்துவ முகாம் நடந் தது.
வனச்சரகர் கணேசன் தலைமையில் நடந்த முகாமில் கால்நடைகளுக்கு குடற்புழு நீக்கம், மலட்டுத்தன்மை நீக்கம் மற்றும் சினை பரிசோதனை, கால்குழம்பு காயங்களுக்கு சிகிச்சை, வயிற்று போக்கிற்கான சிகிச்சைகள் டாக்டர் காளியப்பன் தலைமையிலான மருத்துவ குழுவி னரால் மேற்கொள்ளப்பட்டது. இதில், 150க்கும் மேற்பட்ட கால்நடைகள் பயன் பெற்றன. வனத்துறையினர் பங்கேற்றனர்.

## பூச்சி மேலாண்மை செயல் விளக்கம்

கோத்தகிரி : கோத்தகிரி உபகோட்டம், கூக்கல்தொரையில், "அட்மா' திட்டத்தின் கீழ், முட்டைகோசில் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை செய்முறை விளக்க கூட்டம் நடந்தது.ஊர் தலைவர் தோணன் தலைமை வகித்தார். உபாசி கே.வி.கே., தொழில்நுட்ப வல்லுனர் சுகுணா, முட்டைகோசில் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை குறித்து விளக்கம் அளித்தார்.
மேலும், அட்மா திட்டம் குறித்து, வட்டார தொழில்நுட்பம் குறித்து வட்டார மேலாளர் பேசினார்.
இதில், கூக்கல்தொரை பகுதியை சேர்ந்த 30க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துகொண்டு, பயனடைந் தனர்.

## கோத்தகிரியில் கனமழை

கோத்தகிரி : கோத்தகிரி சுற்றுவட்டாரப் பகுதிகளில், நேற்று பகல் நேரத்தில் கனமழை கொட்டியதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கடந்த சில நாட்களாக கோத்தகிரி மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் கனமழை பெய்துவருவதால், நீர் ஆதாரங்கள் நிறைந்து, தண்ணீர் தட்டுப்பாடு

குறைந்துள்ளது. மேலும், விவசாய நிலங்களில், போதிய ஈரப்பதம் இருப்பதால், பசுந்தேயிலை மகசூல் படிப்படியாக அதிகரித்து வருகிறது. விவசாயிகளும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இதனால், விவசாயிகள் தங்களது தோட்டங்களில் அறுவடை செய்த பசுந்தேயிலையை வினியோகித்து வருகின்றனர். இதற்கிடையில், கோத்தகிரி பகுதியில் நேற்று பகல் பெய்த கனமழையின் காரணமாக, மக்கள் வெளியில் வர முடியாமல் வீட்டிற்குள் ளேயே முடங்கி கிடந்தனர்.

## மரவள்ளியில் மாவுச்சத்து அளவீட்டில்...ஏமாற்றம்! குளறுபடியால் தவிக்கும் விவசாயிகள்

கரூர்: மரவள்ளி கிழங்கில் மாவுச்சத்து அளவீட்டு முறையில் ஏற்படும் குளறுபடி காரணமாக தொடர்ந்து விவசாயிகள் ஏமாற்றப்பட்டு வருகின்றனர்.

தமிழகத்தில் சேலம், நாமக்கல், ஈரோடு, கரூர், தர்மபுரி, திருச்சி உள்பட, 18 மாவட்டங்களில், 90 சதவீதம் மரவள்ளி கிழங்கு சாகுபடி செய்யப்படுகிறது. இதில், கரூர் மாவட்டத்தில் வேலாயுதம்பாளையம், நடையனூர், கவுண்டம்பாளையம், சேமங்கலம், நொய்யல், குளத்துப்பாளையம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில், 10 ஆயிரம் ஏக்கர்களில் மரவள்ளிகிழங்கு பயிரிடப்படுகிறது. இங்கு முள்ளுவாடி, ரோஸ் கிழங்கு, வெள்ளை கிழங்கு என பல்வேறு ரகங்கள் சாகுபடியாகிறது.

கடந்த கார்த்திகை மாதம் பயிரிடப்பட்ட முள்ளுவாடி வகை மரவள்ளி கிழங்கு இப்போது நன்றாக விளைந்து அறுவடை நடக்கிறது. அறுவடை செய்யப்படும் மரவள்ளி கிழங்கு நாமக்கல், சேலம், தருமபுரி ஆகிய மாவட்டங்களில் உள்ள ஜவ்வரிசி மற்றும் கிழங்கு மாவு தயாரிக்கும், 100க்கும் மேற்பட்ட மில்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

இங்கிருந்து வெளிமாநிலங்களுக்கும், அமெரிக்கா, இலங்கை, ஆஸ்திரேலியா, தென் ஆப்பிரிக்கா மற்றும் வளைகுடா நாடுகளுக்கும், ஸ்டார்ச், ஜவ்வரிசி கணிசமான அளவில் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இந்த மில்களை சேர்ந்தவர்கள் நேரிடையாகவோ அல்லது இடைத்தரகர்கள் மூலமாகவோ விவசாயிகளிடமிருந்து கிழங்கை கொள்முதல் செய்கின்றனர். அப்படி கொள்முதல் செய்யும்போது, கிழங்கின் மாவுச் சத்தின் அடிப்படையில்

டன்னுக்கு, 6,500 முதல்,8000 ரூபாய் வரை தற்போது விலை நிர்ணயிக்கப்படுகிறது. மாவு சத்தை "பாயின்ட் ஸ்கேல்' மிஷின் மூலம் கண்டறிந்து கூறுகின்றனர். ஆனால், அந்த இயந்திரம் எவ்வாறு இயங்குகிறது. வியாபாரிகள் கூறும் மாவுச்சத்து உண்மைதானா? என விவசாயிகள் அறிய முடியவில்லை.

இதுகுறித்து வேலாயுதம்பாளையம் விவசாயி ஒருவர் கூறியதாவது:

அறுவடை செய்யப்படும் மரவள்ளியில், ஏதாவது சில கிழங்குகளை எடுத்து கருவி மூலம் அளவீடு செய்கின்றனர். பின் பாயிண்டுக்கு இந்த ரூபாய் என, கணக்கீட்டு டன் விலை நிர்ணயம் செய்கின்றனர். எந்தமுறையில் நிர்ணயம் செய்கின்றனர் என்பது புரியாத புதிராக உள்ளது.

மாவுச் சத்தைக் கண்டறிந்து சொல்வதற்கு அரசின் தரப்பில் எந்த வசதியும் இல்லாத காரணத்தால். வியாபாரிகள் கூறும் மாவுச்சத்து கணக்கை நம்பி விற்பனை செய்யப்படுகிறது. ஒவ்வொரு சீசனுக்கும் மாறுபட்ட விலையை அளிக்கின்றனர். கிழங்கு மாவு தயாரிக்க கூட்டுறவு ஆலைகள், அரசு ஆலைகள் இல்லாத காரணத்தால், விவசாயிகள் தனியார் ஆலைகளுக்கு விற்பனை நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

மரவள்ளி கிழங்கில் இருந்து, ஜவ்வரிசி, ஸ்டார்ச் மாவு கிடைக்கிறது.

விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்யும் மரவள்ளி கிழங்கில், "மாவுச் சத்து' குறைத்து காட்டி ஏமாற்றி வருவதால், விவசாயிகளுக்கு பெருமளவில் இழப்பு ஏற்படுகிறது.

இதுகுறித்து வேளாண் விற்பனை மற்றும் வணிகம் உதவி இயக்குனர்(பொ) விஸ்வநாதன் கூறியதாவது:

மாவுச்சத்தின் அளவு பருவங்களுக்கு ஏற்ப மாறுபடும் தன்மை கொண்டது. மரவள்ளி கிழங்கு அதிகம் பயிரிடப்படும் நாமக்கல், கரூர் மாவட்டங்களில் வேளாண் துறையில், "பாயின்ட் ஸ்கேல்' மிஷின் கிடையாது. கரும்புக்கு உள்ளதை போல மரவள்ளிக்கு அரசு விலை நிர்ணயம் செய்வதில்லை. விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று, இந்த கருவியை வாங்க அரசுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.
கிழங்கின் மாவு சத்தை விவசாயிகள் கண்டறிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். வேளாண் துறை மூலம் மரவள்ளி கிழங்கு மாவுச் சத்தை, அளவீடு செய்த பின், மாவுச் சத்து அளவு குறித்து, வேளாண்துறை "சீல்' வைத்த சான்று வழங்க வேண்டும். இதுமட்டுமல்லாமல் கிழங்கு அதிகளவில் பயிரிடப்படும் இடங்களில் அரசு கிழங்கு மாவு தயாரிக்கும் ஆலைகளை நிறுவ வேண்டும் என்பது விவசாயிகளின் நீண்ட நாள் கோரிக்கையாகும்.

## மழையால் பசுமையான விளைநிலங்கள்

பொன்னேரி : மழையில், நெற்பயிர்களில் ஆதிக்கம் செலுத்தி வந்த இலைப்பூச்சிக்கள், தற்போதைய மழையால் மழைநீரில் அடித்து செல்லப்பட்டன. இதனால், பசுமை முகம் காட்டி, மனம் கவர்கிறது நெற்பயிர்கள்.
மீஞ்சூர் ஒன்றியத்தில், சம்பா பருவத்திற்காக, 25 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில், நெல் பயிரிட்டு உள்ளனர். நடவுப் பணிகள் முடிந்து, விவசாயிகள் களைப்பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.
இந்நிலையில், விளைநிலங்களில் இலைப்பூச்சி தாக்குதல் ஏற்பட்டது.
விவசாயிகள், பூச்சி கொல்லி மருந்துகளை தெளித்தும், அவற்றை கட்டுப்படுத்த முடியாமல் தவித்தனர்.
கடந்த வாரம், தொடர்ந்து இரு தினங்கள், பொன்னேரி சுற்று வட்டார பகுதிகளில் மழை பெய்தது. இதில், நெற்பயிர்களில் ஆதிக்கம் செலுத்தி வந்த இலைப்பூச்சிக்கள், மழைநீரில் அடித்து
செல்லப்பட்டன.பூச்சி தாக்குதலில் இருந்து விளைநிலங்கள் தப்பியதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.தேவராஞ்சேரி, சின்னகாவணம், ஏருசிவன் உள்ளிட்ட கிராமங்களில், பூச்சி தாக்குதலில் இருந்து தப்பிய நெற்பயிர்கள் பசுமையாக காணப்படுகிறது.

## நாட்டுக்கோழி பண்ணை அமைக்க வாய்ப்பு : விவசாயிகளுக்கு சலுகைகள் அறிவிப்பு

காஞ்சிபுரம் : நாட்டுக்கோழி பண்ணை அமைக்க, விவசாயிகளுக்கு இந்த ஆண்டுக்கு சலுகைகளை அறிவிக்கப்பட்டுள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில், 7.5 லட்சம் பேர் கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டு உள்ளனர். இதில், கோழி வளர்ப்போர் மிகவும் குறைவு. எனவே, நாட்டுக்கோழி பண்ணை அமைப்பதில், விவசாயிகளை ஈடுபடுத்த, கால்நடைத் துறை நிர்வாகம் முயற்சி மேற்கொண்டு வருகிறது.

இலக்கு

காஞ்சிபுரம் மாவட்டத்தில், 240 நாட்டுக்கோழி பண்ணைகள் அமைக்க முடிவு செய்யப்பட்டு உள்ளது. இதற்காக விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது.

நாட்டுக்கோழி பண்ணை அமைக்க விரும்பும் விவசாயிக்கு, சொந்த நிலம் இருக்க வேண்டும். தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில், இதற்காக கடனுதவி பெறலாம்.

நாட்டுக்கோழி பண்ணை அமைக்க விரும்பும் விவசாயி விண்ணப்பித்தால், அவர்களுக்கு கால்நடைத் துறை மூலமாக மானியம் வழங்கப்படும்.

வாய்ப்பு உதாரணமாக, கொட்டகை அமைப்பதற்கு, 9,375 ரூபாயும், உபகரணங்கள் கொள்முதல் செய்வதற்கு, 938 ரூபாயும், கோழிக்குஞ்சுகள் வாங்குவதற்கு, 4,687 ரூபாயும், கோழித்தீவனம் வாங்க, 14,250 ரூபாய் என, 29,250 ரூபாய் மானியமாக வழங்கப்படுகிறது.

நாட்டுக்கோழி பண்ணை அமைக்க விரும்பும் விவசாயிகள், மாவட்ட கால்நடைத் துறை மண்டல இணை அலுவலகத்தில் விண்ணப்பிக்கலாம்.

நிலத்தின் பட்டா மற்றும் சிட்டா அடங்கல், குடிநீர் வசதிகள் உள்ளது என, அறியும் வகையில் வருவாய்த் துறை அதிகாரிகளால் வழங்கப்பட்ட சான்றுகளை விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும்.

இது குறித்து, கால்நடைத் துறை இணை இயக்குனர் கோவர்த்தனன் கூறுகையில், "காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு, 240 பண்ணைகள் அமைக்கப்பட உள்ளன.

விண்ணப்பிக்க விரும்பும் கால்நடை பராமரிப்போர், காஞ்சிபுரம் மாவட்ட கால்நடைத் துறை மண்டல அலுவலகத்தில் விண்ணப்பிக்கலாம்," என்றார்.

### விழுப்புரம் நகரில் பூக்கள் விலை உயர்வு

விழுப்புரம் : தீபாவளி பண்டிகை, கல்லறை திருவிழா, அமாவாசை நோன்பு போன்றவற்றால் விழுப்புரத்தில் பூக்களின் விலை அதிகரித்தது.

தற்போது மழைக்காலம் என்றாலும், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் போதிய அளவு பெய்யவில்லை. இதனால் பூக்கள் விளைச்சல் குறைவாக உள்ளது.

இந்நிலையில் தீபாவளி பண்டிகை, கல்லறை விழா, அமாவாசை நோன்பு மற்றும் ராஜஸ்தானைச் சேர்ந்த வியாபாரிகள் புதிய கணக்கு துவக்க விழா உள்ளிட்ட காரணங்களால் பூக்களின் தேவை அதிகரித்துள்ளது.

விளைச்சல் குறைந்து போனதால், விழுப்புரத்தில் இதுவரை கிலோ 100 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட குண்டுமல்லி கிலோ 260 ரூபாய், 80 ரூபாய் விற்ற முல்லை 200 ரூபாய், 60 ரூபாய் விற்ற ரோஜா 120 ரூபாய், 40 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட சாமந்தி பூ கிலோ 100 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. இருந்தாலும், பொதுமக்கள் கூடுதல் விலை கொடுத்து, பூக்களை வாங்கிச் சென்றனர்.

### பரண் மேல் ஆடுகள் வளர்ப்பு: கிராமப்புற விவசாயிகள் ஆர்வம்

மேட்டூர்: இரட்டிப்பு பலன் தருவதால், பரண் மேல் ஆடுகள் வளர்க்கும் முறை கிராமப்புறங்களில் அதிகரித்து வருகிறது.

கிராமபுறம் மற்றும் மலையடிவார பகுதியை சேர்ந்த விவசாயிகள் பலர், விவசாயத் தொழிலுடன் மாடு, ஆடு மற்றும் கோழிகள் வளர்ப்பில் ஈடுபடுகின்றனர். இவர்கள், கால்நடைகளை மலையடிவார பகுதியில் மேய்ச்சலுக்கு விட்டு வளர்த்தனர்.

ஆட்டு இறைச்சிக்கான தேவை அதிகரித்துள்ளதால், ஆடு வளர்ப்பதை பகுதிநேர தொழிலாக செய்த விவசாயிகள், தற்போது, முழுநேர தொழிலாக மாற்றியுள்ளனர்.

மேய்ச்சலுக்கு விடப்படும் ஆடுகளை, சமீபகாலமாக பரண் மேல் விட்டு, பாதுகாப்பாக வளர்க்க துவங்கியுள்ளனர்.

சேலம் மாவட்டம், மேட்டூர் தாலுகாவில் பெரும்பாலான கிராமங்கள் மலையடிவாரத்தில் உள்ளது. அப்பகுதி விவசாயிகளிடையே, பரண் மேல் ஆடு வளர்க்கும் முறை அதிகரித்து வருகிறது. மேட்டூர் அடுத்த, தார்க்காடு கிராமத்தில் பெரிய அளவில் பரண் அமைத்து, இரு ஆண்டுகளாக வெள்ளாடு வளர்க்கும் விவசாயி செந்தில்குமார் கூறியதாவது:

அதிக அளவில் லாபம் கிடைத்து விடும், என நினைத்து, முன் அனுபவம் இன்றி இந்த தொழிலுக்கு வந்தவர்கள் பலர் நஷ்டத்தையே சந்தித்துள்ளனர். பரண் மீதான ஆடு வளர்ப்பு, தாமதமாக லாபம் கொடுக்கும் தொழில். தற்போது, பரணில், 75 ஆடுகள் வளர்க்கிறேன். லாபம் கிடைக்க வேண்டுமென்றால், பருவமழை கை கொடுக்க வேண்டும். ஆடுகளை தாக்கும் நோய்களை கண்டறிந்து, உடனடியாக சிகிச்சை அளிக்க வேண்டும். இயற்கை கை கொடுக்காவிட்டால், நஷ்டத்தை சந்திக்கவும் தயாராக இருக்க வேண்டும்.

எங்கள் நிலத்தில் கோ-4, குதிரை மசால்,வேலி மசால் புல் வகைகளை சுழற்சி முறையில் வளர்த்து, ஆடுகளுக்கு தீவனமாக வழங்குகிறோம். வெள்ளாடுகள், 60 முதல், 70 கிலோ வரை வளரும். ஆனால், 25 கிலோ எடை அளவு வளர்ந்ததும் விற்பனை செய்து விட வேண்டும்.

ஆடுகளின் கழிவுகள், ஒரு டிராக்டர், மூவாயிரம் ரூபாய்க்கு விற்பனையாகிறது. ஒரு ஆண்டில் கிடைக்கும் ஆடுகளின் கழிவுகளை கொண்டு, பராமரிப்பு செலவை சமாளித்து விடலாம். இதன் மூலம் இரட்டிப்பு வருவாய் ஈட்ட முடியும். போதிய விவசாய நிலம், தண்ணீர் வசதி, அனுபவம் இருந்தால், பரண் மேல் ஆடு வளர்ப்பதில் வருவாய் ஈட்ட முடியும்.

இவ்வாறு அவர் கூறினார்.

### கோமாரி நோயால் இறக்கும் மாடுகள் மேட்டூரில் இறைச்சியாக்கி விற்பனை

மேட்டூர்: மேட்டூர் அடுத்த, நவப்பட்டி பகுதியில், கோமாரி நோயால் உயிரிழக்கும் மாடுகளை, வியாபாரிகள் சிலர் இறைச்சிக்காக வாங்கிச் செல்கின்றனர்.

மேட்டூர் தாலுகா, கொளத்தூர் ஒன்றியத்தில் நவப்பட்டி, கோல்நாயக்கன்பட்டி,

ரெட்டியூர், சாணாவூர், தெற்கத்திக்காடு காவேரிகிராஸ், நாட்டாமங்கலம் உள்பட ஏராளமான கிராமம் உள்ளது.

நவப்பட்டி சுற்றுப்பகுதி விவசாயிகள், ஆடு, மாடுகளை வளர்க்கின்றனர். சமீபத்தில் பரவிய கோமாரி நோயால் நவப்பட்டி சுற்றுப்பகுதியில் ஏராளமான மாடுகள் உயிரிழந்துள்ளன. நோயால் உயிரிழக்கும் மாடுகளை, வியாபாரிகள் சிலர் வாங்கிச் சென்று, இறைச்சியாக்கி விற்பனை செய்கின்றனர். இதனால், அந்த இறைச்சியை சாப்பிடும் மக்களும் நோயால் பாதிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

நவப்பட்டி பஞ்., தலைவர் முருகன் கூறியதாவது:

இந்த பஞ்சாயத்தில், ஏராளமான மாடுகள் கோமாரி நோயால் பாதிக்கப்பட்டுள்ளன. நோய் பாதித்து இறந்த மாடுகளை, வியாபாரிகள் சிலர், 500 முதல், 1,000 ரூபாய் வரை கொடுத்து வாங்கிச் செல்கின்றனர். பின்பு, இறந்த மாட்டை வெட்டி கூறு போட்டு விற்று விடுகின்றனர். கோமாரியால் பாதித்த மாட்டை, குழி தோண்டி புதைக்க வேண்டும். அதை வெட்டி சாப்பிடுவதால், பொதுமக்களுக்கும் நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. கோமாரி நோய் தாக்கிய மாடுகளை புதைக்க வேண்டும் என்றும், சாப்பிட கூடாது எனவும், கால்நடைத்துறையினர் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

உணவு பாதுகாப்பு துறை மாவட்ட நியமன அலுவலர் டாக்டர் அனுராதா கூறியதாவது:

கோமாரி நோய் தாக்கிய மாடுகளின் இறைச்சியை வேக வைக்கும் போது, அதில் உள்ள பாக்டீரியாக்கள் அழிந்த போதிலும், வைரஸ்கள் அழியாது. இதனால், நோய் தாக்கிய மாடுகளின் இறைச்சியை சாப்பிடுவோரும், நோயால் பாதிக்கும் அபாயம் உள்ளது, என்றார்.

## ஏக்கருக்கு 74 மூட்டை உற்பத்தி திருந்திய நெல் சாகுபடி முறையில் பெண் விவசாயி சாதனை படைப்பு

நாமக்கல்: திருந்திய நெல் சாகுபடி மூலம், ஒரு ஏக்கருக்கு, 74 மூட்டைகள் உற்பத்தி செய்து, பள்ளிபாளையத்தை சேர்ந்த பெண் விவசாயி சாதனை படைத்துள்ளார். தமிழகத்தில், இரண்டாம் பசுமை புரட்சியை உருவாக்கி, அதன் மூலம் உணவு உற்பத்தியை பெருக்குவோம் என, தமிழக முதல்வர் அறிவித்தார். அதன் அடிப்படையில், நாமக்கல் மாவட்டம், பள்ளிபாளையம் யூனியன், அலமேடு கிராமத்தில், திருந்திய நெல் சாகுபடி மூலம், ஏக்கருக்கு, 74 மூட்டை நெல் உற்பத்தி செய்து, பெண் விவசாயி பத்மினி சாதனை படைத்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது:

சம்பா சாகுபடி பட்டத்தில், 2011-12ம் ஆண்டு ஒரு ஏக்கர் பரப்பில், திருந்திய நெல் சாகுபடி செயல்விளக்கத் திடல் அமைக்கப்பட்டது. வேளாண் துறை மூலம் தொழில் நுட்பங்களை அறிந்து, செயல் விளக்கத்திடல் அமைத்திட நடவு அடையாளமிடும் கருவியும், கோனோவீடர் என்ற கருவியும் முழு மானியத்தில் வழங்கப்பட்டது. ஐ.ஆர்.20 ரக நெல் விதைகளை, இரண்டு கிலோவை பயன்படுத்தி, ஒரு சென்ட் மேடைப்பாத்தியில் விதைப்பு செய்யப்பட்டது. 14 நாட்கள் கழித்து, வாளிப்பானை நாற்றுகளை, அடையாளம் இடும் கருவி மூலம் சதுர நடவு செய்தேன். ஒரு நாற்றுக்கும், மற்றொரு நாற்றுக்கும், இடைவெளி, 22.5 செ.மீ., காய்ச்சலும், பாய்ச்சலும் என்ற முறையில், நீர் பாசனம் மேற்கொள்ளப்பட்டது. கோனோவீடர் கருவி மூலம், பத்து நாட்களுக்கு ஒரு முறை களை மிதித்து, அவற்றை மக்க வைத்து, பயிருக்கு உரமாக்கப்பட்டது. பூச்சி நோய் தாக்குதல் குறைவாகவே இருந்தது. வேளாண் துறை பரிந்துறைப்படி தேவையான உரங்களை பயன்படுத்தப்பட்டது.

இலை வண்ண அட்டை மூலம் தழைச்சத்து தேவை அறிந்து, யூரியாவுடன், வேப்பம் புண்ணாக்கு கலந்து மேலுரமாக மூன்று முறை அளித்தேன். அதிக தூர்கள் பிடித்தன. ஒரே பயிரில், 80 முதல், 90 கதிர்கள் பிடித்தன. ஒரே கதிரில், 120 முதல்,

180 மணிகள் இருந்தன.

திருந்திய நெல் சாகுபடியில் மேற்கொள்ளப்படும், 12 தொழில் நுட்பங்களையும் முழுமையாக பின்பற்றப்பட்டது. அதன் மூலம், ஒரு ஏக்கரில், தலா, 65 கிலோ வீதம், 74 மூட்டைகள் கிடைத்தது. கடந்த ஆண்டில், 54 மூட்டைகள்தான் கிடைத்தது என்பது குறிப்பிடத்தக்கது. ஒரு ஏக்கரில் கூடுதலாக, 40 மூட்டைகள் கிடைத்ததன் மூலம், 25 ஆயிரம் ரூபாய் கூடுதல் வருவாய் கிடைத்தது.
இவ்வாறு அவர் கூறினார்.

## ஏறு முகத்தில் முட்டை விலை 3 மாதத்தில் 55 காசு உயர்வு

நாமக்கல்: தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவால் நிர்ணயிக்கப்படும் முட்டை கொள்முதல் விலை, மூன்று மாதத்தில், 55 காசு வரை உயர்ந்துள்ளதால், பண்ணையாளர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.
நாமக்கல் மண்டலத்தில் இருந்து, தினமும், மூன்று கோடி முட்டைகள், தமிழகம், பிற மாநிலம் மற்றும் வெளிநாடுகளுக்கு சப்ளை செய்யப்படுகிறது. அங்கு, உற்பத்தி செய்யப்படும் முட்டைகள், பண்ணையாளர்களிடம் இருந்து, பண்ணை விலைக்கு பெறப்படுகிறது.
பின்னர், கொள்முதல் விலை நிர்ணயக்கப்பட்டு, தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழுவான, "நிக்' பரிந்துரைக்கும் விலைக்கு வெளி மார்க்கெட்டில் விற்கப்படுகிறது. முட்டைகளின் தேவை மற்றும் உற்பத்திக்கு கட்டுப்படியாகும் வகையில் தினமும், விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. வடகிழக்கு பருவமழை மற்றும் தீபாவளி பண்டிகை, தேவை அதிகரிப்பு உள்ளிட்ட காரணங்களால், முட்டை நுகர்வு அதிகரித்துள்ளது.
கடந்த, ஆகஸ்ட், 3ம் தேதி, 315, செப்டம்பர், 3ம் தேதி, 340, அக்டோபர், 3ம் தேதி, 336 காசுகளாக இருந்த முட்டை விலை நவம்பர், 3ம் தேதி, 370 காசுகளாக உயர்ந்துள்ளது. கடந்த மூன்று மாதத்தில், முட்டையின் கொள்முதல் விலை, 55 காசுகள் வரை உயர்ந்துள்ளது. கடந்த, அக்டோபர், 1ம் தேதி, 333 காசுகளுக்கு விற்கப்பட்ட முட்டை விலை, நவம்பர், 3ம் தேதி, 370 காசுகளாக உயர்ந்து, ஒரு

மாதத்தில், 37 காசுகள் வரை உயர்ந்துள்ளது.

தொடர்ந்து, முட்டை விலை ஏறுமுகமாக இருப்பதால், பண்ணையாளர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். நுகர்வு அதிகரிக்கும் என்பதால், முட்டை விலை மேலும் உயரும், என எதிர்பார்க்கப்படுகிறது.

## மஞ்சள், கடலை ஏலம் ஒத்திவைப்பு

ராசிபுரம்: ராசிபுரம் அடுத்துள்ள நாமகிரிப்பேட்டை கூட்டுறவு சங்கத்தில், மஞ்சள் மற்றும் கடலை ஏலம் ஒத்திவைக்கப்பட்டது.

நாமகிரிப்பேட்டையில், ஒவ்வொரு வாரமும், செவ்வாய்கிழமை மஞ்சள் ஏலம் நடக்கும். நாமகிரிப்பேட்டை, பேளுக்குறிச்சி, மங்களபுரம், மெட்டாலா, முள்ளுக்குறிச்சி பகுதி விவசாயிகள், மஞ்சளை விற்பனைக்கு கொண்டு வருவர்.

அதேபோல், ஒவ்வொரு வெள்ளிக்கிழமை தோறும், கடலை ஏலம் நடக்கும்.

இந்நிலையில், தீபாவளி பண்டிகையையொட்டி, (நவ., 1) நடக்க வேண்டிய கடலை ஏலம், அடுத்த வாரம் வெள்ளிக்கிழமை (நவ., 8) ஒத்திவைக்கப்பட்டது.

அதேபோல், வரும் செவ்வாய்கிழமை (நவ., 5) நடக்க வேண்டிய ஏலம், நவம்பர், 12ம் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**04.11.2013**

**உற்பத்தி செலவு குறைவு சேனைகிழங்கு பயிரிட விவசாயிகள் ஆர்வம்**



கோவில்பட்டி : கோவில்பட்டி பகுதியில் உற்பத்தி செலவு குறைவால் சேனைக்கிழங்கு பயிரிட விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி, விளாத்திகுளம், எட்டயபுரம், ஓட்டப்பிடாரம் போன்ற பகுதிகளில் ஆண்டுதோறும் பெய்யும் பருவ மழையை நம்பி உளுந்து, பாசிப்பயறு, சோளம், மக்காச்சோளம், கம்பு, மிளகாய் வத்தல் போன்ற மானாவாரி பயிர்களை விவசாயிகள் சாகுபடி செய்து வருகின்றனர்.

இந்த ஆண்டும் மழையை நம்பி இப்பகுதியில் மானாவாரி பயிர்களை விவசாயிகள் விதைத்துள்ளனர். இதுதவிர சேனைகிழங்கு பயிரிடுவதில் அவர்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர். குறிப்பாக கோவில்பட்டி அருகே நாகம்பட்டி, வில்லிசேரி, பசுவந்தனை, தீத்தாம்பட்டி போன்ற பெரும்பாலான கிராமங்களில் ஆண்டுதோறும் மானாவாரி பயிரிட்டு வந்த விவசாயிகள் ஒரு மாற்றத்திற்காக இந்தாண்டு சேனைக்கிழங்கு பயிரிட்டுள்ளனர்.

இது குறித்து அவர்கள் கூறுகையில், சேனைக் கிழங்கு பயிரிட உற்பத்தி செலவு

மிகவும் குறைவு.  தண்ணீர் அதிகம் தேவையில்லை. ஒரு ஆண்டு கழித்த பின்னர்தான் சேனைக்கிழங்கை அறுவடை செய்வோம். பயிர்கள் ஊடே வளரும் களைகளை பறிக்க கூலி ஆட்கள் தேவையில்லை. விவசாயி வீட்டில் உள்ள குடும்ப உறுப்பினர்களே இந்த பணிகளை மேற்கொள்வோம். சேனைகிழங்கு கிலோ 9 ரூபாய்க்கு மார்க்கெட்டில் விலை போகிறது. விலை குறைவாக இருந்தாலும் உற்பத்தி மற்றும் பராமரிப்ப செலவும் மிகவும் குறைவாக இருப்பதால் இதனை பயிரிட்டுள்ளோம்' என்றனர்.

**எள் விலை மூட்டைக்கு ரூ.3 ஆயிரம் உயர்வு**



விருதுநகர் : வடமாநிலங்களில் மழையால் ஏற்பட்ட பாதிப்பால் எள் மூட்டைக்கு ரூ.3,125 உயர்ந்ததால் நல்லெண்ணெய் விலை டின்னுக்கு ரூ.150 உயர்ந்துள்ளது. வடமாநிலங்களில் பெய்த கனமழை பாதிப் பால் விளைச்சல் கடும் பாதிப்புக்கு உள்ளானது, மேலும் தீபாவளி பண்டிகை தேவை அதிகரிப்பால் கடந்த வாரம் உளுந்து, துவரம்பருப்பு, பாசிப்பருப்பு விலை மூட்டைக்கு ரூ.400 முதல் ரூ.600 வரை¢ உயர்ந்தது.

குஜராத், ராஜஸ்தான் மாநிலங்களில் கனமழை பெய்த தால் எள் விளைச்சல் கடுமையாக பாதித்தது. இதனால் விலையும் உயர்ந்துள்ளது. வெள்ளை எள் (75 கிலோ) மூட்டை ரூ.8,500லிருந்து ரூ.11,625 என உயர்ந்துள்ளது. எள் விலை உயர்வால் தும்பை நல்லெண்ணெய் (15 லிட்டர்) டின் ரூ.3,360லிருந்து ரூ.3,510 என உயர்ந்துள் ளது. லோக்கல் நல்லெண்ணெய் டின் ரூ.2,750லிருந்து ரூ.2,850

என விற்பனையா னது. ஒரு லிட்டர் நல்லெண்ணெய் ரூ.224லிரு ந்து ரூ.235 ஆக விற்பனையாகிறது.

**காற்றழுத்த தாழ்வு நிலையால் தமிழகம், புதுச்சேரியில் மழை நீடிக்கும்**

சென்னை : வங்கக்கடலில் உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக தமிழகம், புதுச்சேரியில் அடுத்த 48 மணி நேரத்துக்கு பலத்த மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது. தமிழகத்தில் கடந்த 2 நாட்களாக நல்ல வெயில் அடித்து வந்தது. இந்நிலையில், நேற்று முன்தினம் முதல் சென்னை உள்பட தமிழகத்தில் பல பகுதிகளில் பலத்த மழை பெய்து வருகிறது.

சென்னையை பொறுத்தவரை எழும்பூர், திருவல்லிகேணி, சென்ட்ரல், புரசைவாக்கம், ஓட்டேரி, பெரம்பூர், கோயம்பேடு, வடபழனி, அண்ணா நகர், அமைந்தகரை, சாந்தோம், பட்டினப்பாக்கம் மற்றும் புறநகர் பகுதிகளில் நேற்று அதிகாலை 2 மணி முதல் காலை 5 மணி வரை பலத்த மழை பெய்தது. இதனால், பல இடங்களில் சாலைகளில் மழைநீர் தேங்கியது.

அதன் பின்னர், காலை 7 மணி வரை சாரல் மழை அடித்து கொண்டிருந்தது. மாலை 4 மணி முதல் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது.  இதனால், குளிர்ச்சியான தட்பவெப்பம் உருவானது. இதுகுறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியதாவது: இலங்கை அருகே வங்க கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை ஏற்பட்டுள்ளது. இது குமரி கடலோர பகுதியில் தற்போது நிலை கொண்டுள்ளது. இதன் காரணமாக தமிழகம், புதுச்சேரியில் அடுத்த 48 மணி நேரத்துக்கு அனேக இடங்களில் மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. கடலோர மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் பலத்த மழை பெய்யும். சென்னையை பொறுத்தவரை வானம் மேக மூட்டத்துடன் காணப்படும். நகரில் ஒரு சில இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடும்.

கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக ராமநாதபுரத்தில் 10 சென்டி மீட்டர் மழை பெய்துள்ளது. அடுத்தபடியாக மயிலாடி 9 செ.மீ, சாத்தான்குளம், சேரன்மகாதேவியில் 8 செ.மீ, திருச்செந்தூர், பாபநாசத்தில் 7 செ.மீ, மணிமுத்தாறு, சாத்தனூர் அணையில் 6 செ.மீ, நாகர்கோவில், பாம்பன், நாங்குநேரியில் 5 செ.மீ, தொண்டி, பூதப்பாண்டி, அம்பாசமுத்திரம், கீரனூர், பரங்கிப்பேட்டையில் 4 செ.மீட்டர் மழை பதிவாகியுள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

**பருவமழை தீவிரம் குமரி, நெல்லை, நீலகிரியில் கனமழை**

சென்னை : குமரி, நெல்லை, தூத்துக்குடி, நீலகிரி மாவட்டங்களில் பருவ மழை தீவிரமடைந்துள்ளதால் அணைகளின் நீர் மட்டம் அதிகரித்துள்ளது. குமரி மாவட்டத்தில் கடந்த 1ம் தேதி முதல் மீண்டும் வடகிழக்கு பருவ மழை பெய்ய தொடங்கியுள்ளது. மலையோர பகுதிகள், அணையின் நீர்பிடிப்பு பகுதிகளிலும் கனமழை பெய்து வருகிறது. இந்த மழை காரணமாக பழையாறு, வள்ளியாறு, தாமிரபரணி உள்ளிட்ட ஆறுகளில் வழக்கத்தைவிட அதிக அளவு தண்ணீர் பாய்ந்தோடுகிறது.

திற்பரப்பு அருவியிலும் அதிக அளவில் தண்ணீர் கொட்டுகிறது. கடந்த 2 நாட்களாக மயிலாடி, கொட்டாரம் பகுதிகளில் அதிக அளவு மழை பெய்ததால் அந்த பகுதியில் தென்னந்தோப்புகள், வயல்வெளிகளில் வெள்ளம் சூழ்ந்துள்ளது. தொடர்ந்து கனமழை நீடித்து வருவதால் பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணைகள் மூடப்பட்டுள்ளன. நேற்று காலை நிலவரப்படி பேச்சிப்பாறை அணை நீர்மட்டம் 19.70 அடியாக இருந்தது. அணைக்கு 589 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது.

பெருஞ்சாணி அணை நீர்மட்டம் 58.35 அடியாக இருந்த நிலையில், அணைக்கு 162 கன அடி தண்ணீர் வரத்து காணப்பட்டது. நெல்லை: நெல்லை, தூத்துக்குடி

மாவட்டங்களில் கடந்த 4 நாட்களாக பரவலாக  மழை பெய்தது. தென்காசி பகுதியில் கடந்த இரு தினங்களாக பலத்த மழை பெய்தது. களக்காட்டில் நேற்று முன்தினம் தொடங்கிய தூறல் மழை  விட்டு விட்டு  நேற்று காலை வரை  பெய்தது.

கடையநல்லூரில் சுமாராக மழை பெய்தது. மலைப்பகுதியில் மழை இல்லை. தொடர் மழை காரணமாக பாபநாசம், மணிமுத்தாறு, அடவிநயினார், கருப்பாநதி உள்ளிட்ட அணைகளில் நீர்மட்டம் அதிகரித்துள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். தொடர் மழையால் ஒரு சில இடங்களில் நெல் அறுவடை பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

நீலகிரி: நீலகிரி மாவட்டம் மஞ்சூர் சுற்றுப்புற பகுதிகளில் கடந்த சில தினங்களாக பலத்த மழை பெய்து வருகிறது. நேற்றுமுன்தினம் பலத்த இடி, மின்னலுடன் விடிய, விடிய கனமழை பெய்தது. இதனால் சாலைகளில் வெள்ளம் ஆறாக பெருக்கெடுத்தோடியது. தாழ்வான குடியிருப்பு பகுதிகளில் மழை சூழ்ந்ததால் மக்கள் பெரிதும் அவதிக்குள்ளானார்கள்.

மஞ்சூர்,கிண்ணக்கொரை சாலையில் ராட்சத மரம் வேரோடு சாய்ந்து விழுந்தது. தகவல் அறிந்து நெடுஞ்சாலைதுறை  பணியாளர்கள் நீண்ட நேரம் போராடி மரத்தை வெட்டி அகற்றினர். 2 மணி நேர த்துக்கு பின் மீண்டும் போக்குவரத்து துவங்கியது.

நேற்று மதியம் குன்னூர்,மேட்டுப்பாளையம் சாலை மரப்பாலம் பகுதியில் ராட்சத மரம் திடீரென வேரோடு சாய்ந்து விழுந்தது. சாலையில் மரக்கிளைகள் பரவி கிடந்ததால், போக்குவரத்து முற்றிலும் தடைபட்டது. கோத்தகிரி வழியாக வாகனங்கள் திருப்பி விடப்பட்டன. தகவலறிந்து வந்த தீயணைப்பு துறையினர் பொதுமக்கள் உதவியுடன் மரத்தை வெட்டி அகற்றினர். 4 மணி நேரத்திற்கு பிறகு போக்குவரத்து சீரானது.

எக்ஸ்ட்ரா தகவல்

வடகிழக்கு பருவ மழை சராசரியான 438 மி.மீட்டரை விட இந்த ஆண்டு அதிகமாக இருக்கும் என்று இந்திய வானிலை ஆய்வு துறை கணித்துள்ளது.

**வறட்சியை விரட்ட... வளர்ச்சியை பெருக்க நனவாகுமா நதிகள் இணைப்பு திட்டம்**

மதுரை : கேரளாவில் 44 ஆறுகளும், தமிழகத்தில் 34 ஆறுகளும் ஓடுகின்றன. நதிகள் இணைப்பு திட்டத்தின் முதற்கட்டமாக, காவிரியில் இருந்து வைகை, குண்டாறு உள்ளிட்ட 9 ஆறுகளை இணைப்பது ஆய்வுடன் முடங்கி நிற்கிறது. இதனால், தென்மாவட்டங்கள் தண்ணீருக்காக ஏங்கும் நிலை உருவாகி உள்ளது. இந்தியாவில் நதிகள் திசை மாறியதின் விளைவாக, ஒரு பக்கம் வெள்ளச் சீற்றத்தினால் பேரழிவு ஏற்படுகிறது.

இன்னொரு பக்கம் தண்ணீர் பஞ்சத்தால் வறட்சி தலைவிரித்தாடுகிறது. நேரு பிரதமராக இருந்தபோது அமைச்சராக இருந்த கே.எல்.ராவ் கங்கை, காவிரி நதிகள் இணைப்பு திட்ட யோசனை தெரிவித்தார். இதில், விந்திய மலையை கடக்க தண்ணீரை ஆயிரத்து 800 அடி உயரத்திற்கு ஏற்றவேண்டும் என்பதால் திட்டம் நிறைவேறவில்லை.

இதன்பிறகு, ஒடிசாவிலுள்ள மகாநதி, ஆந்திராவில் ஓடும் கோதாவிரி, கிருஷ்ணா, பெண்ணாறு தமிழகத்தில் ஓடும் பாலாறு, காவிரி, வைகை நதிகள் இணைக்கப்படவேண்டும் என பரிந்துரைக்கப்பட்டது. 2002ல், அப்போதைய பிரதமர் வாஜ்பாய் பாராளுமன்றத்தில், ‘நதிகள் இணைப்பு திட்டம்‘ நிறைவேற்றப்படும் என அறிவித்தார். அதில் 2 விதமாக திட்டங்கள் வெளியிடப்பட்டன. மகாநதி, கோதாவிரியில் வீணாகும் நீரை, பெண்ணாறு,

கிருஷ்ணா, காவிரி, வைகை உள்ளிட்ட 16 நதிகளுக்கு திருப்பி விடுவது முக்கியமாக எடுத்துக் கொள்ளப்பட்டது. மகாநதி, கோதாவிரி நதிகளின் உபரி நீரை பெண்ணாறு, கிருஷ்ணா, காவிரி, வைகை நதிகளுக்கு திருப்பி விடுவது என அந்த ஆய்வு குழு பரிந்துரை அளித்தது.

கேரளா, கர்நாடகாவில் மேற்கு நோக்கி பாய்ந்து அரபி கடலுக்குள் வீணாக கலப்பதை, கிழக்கு நோக்கி திருப்பி தமிழகத்திலுள்ள நதிகளுடன் இணைக்கவும் பரிந்துரைக்கப்பட்டது. அதை வாஜ்பாய் அரசு ஏற்றுக் கொண்டது. நதிகள் இணைப்பு திட்டத்தின் முன்னோடியாக முல்லை பெரியாறு , வைகை ஆறு இணைக்கப்பட்டுள்ளது என்று அப்போது வாஜ்பாய் மேற்கோள் காட்டி திட்டத்தை அறிவித்தார். மத்தியில் அடுத்து ஆட்சிக்கு வந்த அரசு திட்டத்தை நிறைவேற்றாமல் கிடப்பில் போட்டது.

இந்த திட்டத்தை மத்திய அரசு நிறைவேற்ற உத்தரவிடக்கோரி உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. உச்சநீதிமன்றம் நதிகள் இணைப்பு திட்டத்தை காலதாமதமின்றி நிறைவேற்றும்படி மத்திய அரசுக்கு கண்டிப்புடன் உத்தரவிட்டது. மத்திய நீர் மேம்பாட்டு ஆணையம் ஆய்வு நடத்தி அளித்துள்ள பரிந்துரையில் இடம் பெற்றுள்ள முக்கிய அம்சங்கள் வருமாறு:

* கேரளாவில் 44 ஆறுகள் ஓடுகின்றன. இங்கு ஆண்டுக்கு 2,500 டிஎம்சி தண்ணீர் உற்பத்தியாகிறது. இதில் 500 டிஎம்சி கேரளா பயன்படுத்துகிறது. சுமார் 2,000 டிஎம்சி கடலில் கலக்கிறது. கேரளாவில் நீரை தேக்கி வைக்கும் வாய்ப்புகள் குறைவு. அந்த தண்ணீரை பயன்படுத்தும் அளவுக்கு அங்கு விளை நிலங்களும் இல்லை. கேரளாவில் கடல் நோக்கி பாயும் நீரை தமிழகத்திற்கு திருப்பினால் தென்மாவட்டங்களில் 10 லட்சம் ஏக்கர் பாசன வசதி பெறும். குடிநீர் பஞ்சம் வராது.

* தமிழகத்தில் ஓடும் 34 ஆறுகள், மழை காலம் தவிர பெரும்பாலும் வறண்ட நிலையிலேயே உள்ளன. கேரளாவிலுள்ள அச்சன்கோவில் ஆறு, பம்பை ஆறு தமிழகத்தில் வைப்பாற்றுடன் இணைக்கப்பட வேண்டும்.

* கேரளாவிலுள்ள கல்லாற்றை தமிழகத்திலுள்ள வைகை ஆற்றுடன் இணைக்க வாய்ப்புள்ளது.

* காவிரி ஆற்றில் இருந்து அக்னியாறு, வெள்ளாறு, பாம்பாறு, விருசுழியாறு, மணிமுத்தாறு, வைகை, குண்டாறு ஆகிய 9 தென்மாவட்ட ஆறுகளை இணைத்துக் கொள்ளலாம்.

இது போன்ற பல்வேறு திட்டங்கள் பரிந்துரையில் இடம் பெற்றன. 2007ல் தமிழக அரசு சார்பில் காவிரி ஆற்றில் இருந்து சிவகங்கை மாவட்டத்திலுள்ள அக்னியாறு, மணிமுத்தாறு மற்றும் விருச்சுழியாறு, பாம்பாறு அதை தொடர்ந்து வைகை, குண்டாறு வரை ஆறுகளை இணைக்க ஆய்வு நடத்தி முடிக்கப்பட்டது. நெல்லை மாவட்டத்தில் ஆறுகள் இணைப்பு திட்ட பணிகள் தொடங்கி வைக்கப்பட்டன. அதன் பிறகு அந்த பெரிய திட்டம் முடங்கியது.

நதிகள் இணைப்பு திட்டம் முடங்கியதால் தமிழகத்திற்கு , குறிப்பாக , தென்மாவட்டங்கள் தண்ணீருக்காக ஏங்கும் நிலை உருவாகியுள்ளது. தொடர்ந்து வறட்சி வாட்டுகிறது. இந்த ஆண்டும் வட கிழக்கு பருவமழை தாமதமாகி பெரும்பாலான ஆறுகள் வறண்டு கிடக்கின்றன. கண்மாய்கள் நிரம்பவில்லை. தற்போது பெய்து வரும் மழையும் நீடிக்குமா என்ற எதிர்பார்ப்புடன் காத்திருக்க வேண்டிய நிலையே நிலவுகிறது. நதிகள் இணைப்பு திட்டம் நிறைவேற தவறினால், முக்கிய தென்மாவட்டங்கள் பாசனம், குடிநீருக்கு ஏங்கும் ஆபத்தான நிலையே நீடிக்கும்.

கேரளா எதிர்ப்பது ஏன்?

நதி நீர் இணைப்பு திட்டத்தை எதிர்க்கும் மாநிலங்களில் கேரளா முக்கிய இடம் பெற்றுள்ளது. ஏனென்றால் ஆங்கிலேயர் ஆட்சியில் பெரியாறு அணை கட்டப்பட்டதன் மூலம், முல்லை பெரியாறும், வைகை ஆறும் இணைக்கப்பட்டுள்ளது. தற்போது நதி நீர் இணைப்பை ஏற்றுக் கொண்டால் முல்லை பெரியாறு அணை பிரச்னையில் தனக்கு பின்னடைவு ஏற்படுமோ என அஞ்சுகிறது.

எக்ஸ்ட்ரா தகவல்

இந்தியாவில் ஆண்டுதோறும் 69 ஆயிரம் டிஎம்சி தண்ணீர் உற்பத்தியாகிறது. இதில் 8 ஆயிரத்து 800 டிஎம்சி தான் பயன்படுத்தப்படுகிறது. மீதமுள்ள தண்ணீர் ஆறுகள் மூலம் வீணாக கடலில் கலக்கிறது.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**04.11.2013**

**பருவமழை நன்றாக உள்ளதால் உணவு தானியங்கள் உற்பத்தி சிறப்பான அளவில் அதிகரிக்கும்**



புதுடெல்லி,

பருவமழை நன்றாக உள்ளதால், நடப்பு ஆண்டில் உணவு தானியங்கள் உற்பத்தி சிறப்பான அளவில் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கரீப் பருவத்தில் உணவு தானியங்கள் உற்பத்தி அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும் நீர்பிடிப்பு பகுதிகளில் போதுமான அளவில் தண்ணீர் உள்ளதால் ரபி பருவத்திலும் உற்பத்தி நன்றாக இருக்கும் என மத்திய நிதியமைச்சர் ப. சிதம்பரம் தெரிவித்தார்.

நடப்பு நிதி ஆண்டில் ஏப்ரல் முதல் ஆகஸ்டு வரையிலான காலத்தில் வங்கிகள் வழங்கிய விவசாய கடன் 12.1 சதவீதம் வளர்ச்சி அடைந்துள்ளது. நடப்பு நிதி ஆண்டில் ரூ.7 லட்சம் கோடி விவசாய கடன் வழங்க இலக்கு நிர்ணயக்கப்பட்டுள்ளது.

முதலாவது முன்கூட்டிய மதிப்பீட்டின் படி கரீப்பருவத்தில் உற்பத்தி 12.93 கோடி டன்னாக அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது சென்ற ஆண்டின் முதல் கட்ட மதிப்பீட்டைக் காட்டிலும் 10.3 சதவீதம் (11.71 கோடி டன்) அதிகமாகும்.

உணவு பொருள்கள் விலை உயர்வால் பணவீக்கம் அதிகரித்துள்ளது. ஆகையால் இயக்க ஆற்றல் அடிப்படையில் சந்தையில் உணவு தானியங்களை விற்பனை செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. உதாரணமாக கோதுமையின் விலை நாட்டின் எந்த பகுதியில் எல்லாம் அதிகமாக உள்ளதோ அங்கு விற்பனை செய்யப்பட்டு விலை உயர்வு தடுக்கப்படும் என சிதம்பரம் தெரிவித்தார்.

**தேனி மாவட்டத்தில் ஏற்றுமதி தரத்தில் வாழை உற்பத்தி செய்ய விவசாயிகளுக்கு மானியம்**



தேனி மாவட்டத்தில் வாழைப்பழ குலைகளுக்கு பாதுகாப்பு உறை பொருத்தி, ஏற்றுமதி தரம் வாய்ந்த வாழைப்பழங்களை உருவாக்க, ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.12 ஆயிரத்து 500 மானியம் வழங்கப்பட உள்ளது.

**<u>ஏற்றுமதி தரத்தில் வாழை</u>**

தேனி மாவட்டம் தோட்டக் கலை மாவட்டமாக திகழ்கிறது. இங்கு நெல் சாகுபடிக்கு அடுத்த படியாக பெரும்பாலான விவசாயிகள் வாழை சாகுபடியில் ஈடுபட்டு உள்ளனர். தேனி மாவட்டத்தில் கடந்த ஆண்டு விளைச்சல் அடைந்த வாழைப்பழங்கள் சுமார் 2 ஆயிரம் டன் அளவில் வளைகுடா நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு உள்ளது.

ஏற்றுமதி தரத்தில் வாழைப் பழங்களை உற்பத்தி செய்ய வேண்டும் என்றால் அவற்றை நோய் தாக்குதல், பூச்சிகள் தாக்குதலில் இருந்து காப்பாற்ற வேண்டும். இதனால் ஏற்றுமதி தரத்திற்கு வாழை சாகுபடி செய்யும் வகையில் வாழைப் பழக்குலைகளுக்கு பாதுகாப்பு உறை பொருத்த விவசாயி களுக்கு தோட்டக்கலை அதிகாரிகள் அறிவுறுத்தி வருகின்ற னர்.

**உறைகள் பொருத்த மானியம்**

இந்த பாதுகாப்பு பிளாஸ்டிக் உறைகளை வாழை குலையின் அடிப்பாகத்தில் இருந்து மேல் நோக்கி பொருத்தி, குலையின் தலை பகுதியில் இறுக்கமாக கட்டி வைக்க வேண்டும். இந்த உறைகள் மூலம் வாழைப் பழங்களுக்கு காற்றோட்டம் கிடைப்பதுடன், நோய் தாக்குதலும் கட்டுப்படுத்தப்படுகிறது. இவ்வாறு பிளாஸ்டிக் உறை அமைப்பதற்கு தோட்டக்கலை துறை சார்பில் மானியமும் வழங்கப்படுகிறது. ஒரு ஹெக்டேருக்கு ரூ.12 ஆயிரத்து 500 வீதம் மானியம் வழங்கப்படுகிறது. எனவே பிளாஸ்டிக் உறை பொருத்த விரும்பும் விவசாயிகள் தங்களது சொந்த பணத்தில் உறைகள் பொருத்த வேண்டும். பின்னர் அதற்கான விலைப் பட்டியல், சிட்டா, அடங்கல் ஆகியவற்றுடன் அந்தந்த பகுதி வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனரை அணுகி மானியத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும். அப்போது விவசாயிகள் தங்களின் வங்கி கணக்கு எண் குறிப்பிட வேண்டும். தகுதியுள்ள விவசாயி களுக்கு மானியத் தொகை அவர்களின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்படும்.

இந்த தகவலை தேனி தோட்டக்கலை துணை இயக்குனர் முருகன் தெரிவித்து உள்ளார்.

**கோழிப்பண்ணைகளில் உயிர் பாதுகாப்பு முறைகளை கடைபிடிக்க வேண்டும் ஆராய்ச்சி நிலையம் தகவல்**



நாமக்கல்,

கோழிப்பண்ணை களில் உயிர் பாதுகாப்பு முறைகளை கடைபிடிக்க வேண்டும் என நாமக்கல் கால்நடை மருத்துவ கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் தெரிவித்து உள்ளது.

**ஆராய்ச்சி நிலையம்**

நாமக்கல் மாவட்டத்தில் இன்றும், நாளையும் நிலவும் வானிலை குறித்து நாமக்கல் கால்நடை மருத்துவ கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் சார்பில் வெளியிடப்பட்டு உள்ள அறிக்கையில் கூறப்பட்டு உள்ளதாவது:-

இன்று 5 மி.மீட்டர் மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. காற்றின் வேகம் காற்று 4 கி.மீ வேகத்தில் தென் மேற்கு திசையில் இருந்து வீசும். வெப்ப நிலையை பொறுத்த வரையில் அதிகபட்சமாக 91.4 டிகிரியாகவும், குறைந்தபட்சமாக 71.6 டிகிரியாகவும் இருக்கும். காற்றின் ஈரப்பதம் அதிகபட்சமாக முறையே 85, 81 சதவீதமாகவும், குறைந்தபட்சமாக முறையே 63, 62 சத வீதமாகவும் இருக்கும்.

**சிறப்பு வானிலை**

வடகிழக்கு பருவ மழையின் தாக்கம் கடலோர மாவட்டங்களில் மட்டுமே அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளதால், உள் மாவட்டங்களில் அதன் தாக்கம் குறைவாக இருக்கும். ஆயினும், வெப்பம் அதிகரிக் கும் வாய்ப்பு இல்லாததால் கோழிகளில் முட்டை உற்பத்தி இயல்பாகவே காணப்படும். கடலைப்புண்ணாக்கில் பூஞ்சான நச்சின் தாக்கம் அதிக மாக உள்ளதால் அதன் உபயோகத்தில் மிகுந்த கவனம் கொள்ள வேண்டும்.கடந்த வாரம் கோழியின நோய் ஆய்வகத்தில் ஆய்வு செய்யப்பட்ட கோழிகள் பெரும்பாலும் ஈரல் அழற்சி மற்றும் மேல் மூச்சுக்குழாய் நோய்களினால் இறந்து இருப் பது தெரிய வந்துள்ளது. மேலும் இந்த ஆய்வகத்தில் ஆய்வு செய்யப்பட்ட விலங் கின தீவன புரத மூலப்பொருட் களில் கிளாஸ்ட்ரிடியம் கிருமி யின் மாசுபாடு இருப்பது தெரிய வந்துள்ளது. ஆகவே பண்ணையாளர்கள் தரமான மூலப்பொருட்களை உபயோ கப்படுத்துவதுடன், பண்ணை உயிர் பாதுகாப்பு முறைகளை யும் கடைபிடிக்குமாறு அறி வுறுத்தப்படுகிறார்கள்.இவ் வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**ஊரக வேலை உறுதிதிட்ட ஊதியத்தை உயர்த்தி வழங்க வேண்டும் விவசாய தொழிலாளர் சங்க கூட்டத்தில் தீர்மானம்**

தர்மபுரி,

விவசாய தொழிலாளர் சங்கத்தின் தர்மபுரி மாவட்ட கூட்டம் தர்மபுரியில் நடந்தது. கூட்டத்திற்கு ஒன்றிய குழு உறுப்பினர் அர்ச்சுனன் தலைமை தாங்கினார். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் மாவட்ட செயலாளர் மாரிமுத்து, தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் மல்லையன் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டு பேசினார்கள். ஊரக வேலை உறுதிதிட்ட பணிக்காலத்தை 200 நாட்களாக அதிகரிக்க வேண்டும். இதற்கான 1 நாள் ஊதியத்தை ரூ.300 ஆக உயர்த்த வேண்டும். விவசாய தொழிலாளர்களுக்கு வீட்டுமனை பட்டா வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.